மின்னிதழ்

# தேசியம்

THESIYAM தேசியம்

www.thesiyamnews.com



Smart Fly

ARUN WINGS
TRAVELS & TOURS

கடவுச் சீட்டு / வீசா சேவை / ETA வீசா / பயணக் காப்பீடு
விடுமுறை பயணத்தொகுப்பு / பயணத்திட்டம்

ARUN WINGS TRAVELS & TOURS (Pvt) Ltd
143, Temple Road, Jaffna. Tel: 076 8472458, 076 6668680
arunwingslanka@gmail.com



மலர்: 02 | குரல்: 147 | வள்ளுவர் ஆண்டு 2054 | செவ்வாய்க்கிழமை 06.02.2024 | பக்கங்கள் 12


# தமிழினத்தின் இனவழிப்பு!

## பிரித்தானிய மன்னரிடம் கையளிக்கப்பட்ட கடிதம்!




பக்கம்-09

## மாணவர்கள் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் ஜனநாயகத்திற்கு எதிரான செயல் சட்டத்தரணி சுகாஸ்!



பக்கம்-02

## சாந்தனை இலங்கைக்கு அழைத்து வருவதற்கு ஜனாதிபதி இணக்கம்!



பக்கம்-05

# யாழ். வட்டுக்கோட்டை பொலிஸாரால் தாக்கப்பட்ட பல்கலைக்கழக மாணவன்!

## மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு!

பக்கம்-04

## இந்தியாவிற்கு திடீர் விஜயம்! ஜெய்சங்கரை சந்தித்த அநுரகுமார!



பக்கம்-03

## ஈழத்து தெருக்கள் எங்கும் ஒலித்த இசை வாணியின் இதயக் குரல்!



பக்கம்-07


ROLEX HOTEL

360, Galle Road,
Wellawatte,Colombo06.
Tel: 011 2360462



ROLEX HOTEL

340, Hospital Road, Jaffna.
Tel: 021 2222808
E-mail: rolex.hotel@yahoo.com

# மாணவர்கள் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் ஜனநாயகத்திற்கு எதிரான செயல்

## சட்டத்தரணி சுகாஸ்!



மக்களால் தெரிவு செய்யப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிறிதரன் மற்றும் அமைதியான வழியில் போராடிய மாணவர்கள் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் ஜனநாயகத்திற்கு எதிரான அரசாங்கத்தின் நிலைப்பாட்டினை வெளிப்படுத்தி நிற்பதாக தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஊடகப் பேச்சாளர் சட்டத்தரணி சுகாஸ் தெரிவித்துள்ளார்.

சுதந்திர தினத்தினை கரிநாளாக அறிவித்து முன்னெடுக்கப்பட்ட போராட்டங்களில் பலர் தாக்கப்பட்டமை குறித்து கொழும்பில் நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தின் இல்லத்தில் இடம்பெற்ற ஊடகசந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

மேலும் தமிழர் தாயகத்தின் பல பிரதேசங்களில் முன்னெடுக்கப்பட்ட போராட்டங்களில் பலர் தாக்கப்பட்டும் கண்ணீர்ப்புகைப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டும் அரசாங்கம் தனது அராஜகத்தை வெளிப்படுத்தியிருந்ததாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

அத்துடன் இலங்கையின் பொருளாதார நெருக்கடிகளுக்கு நிதியுதவி வழங்குகின்ற சர்வதேச நாணய நிதியம் உள்ளிட்ட அனைத்து நாடுகளும் இலங்கை அரசாங்கத்தினது ஜனநாயகத்தின் குரலை நசுக்கும் செயற்பாடுகளை அவதானித்துச் செயற்பட வேண்டுமெனவும் சட்டத்தரணி சுகாஸ் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

# கிளிநொச்சியில் மாணவர்கள் கைதானதும் கொழும்பிற்கு சென்ற தொலைபேசி அழைப்பு!

சுதந்திர தினத்தை தமிழர்களின் கரிநாளாக பிரகடனப்படுத்தி கிளிநொச்சியில் மேற்கொள்ளப்பட்ட ஆர்ப்பாட்டத்தில் வைத்து கைது செய்யப்பட்ட பல்கலைக்கழக மாணவர்கள் விடுவிக்கப்பட்ட சம்பவத்தின் போது கொழும்பிற்கு மேற்கொள்ளப்பட்ட தொலைபேசி அழைப்பு தொடர்பில் தகவல் வெளியாகியுள்ளது.

குறித்த பல்கலைக்கழக மாணவர்கள் விடுவிப்பு தொடர்பான விடயங்களை கிளிநொச்சி மாவட்ட சிரேஸ்ட பொலிஸ் அத்தியட்சகர் கையாண்டுள்ளார்.
கைது செய்யப்பட்ட மாணவர்கள் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் உடனடியாக கொழும்பிலிருந்த ஜனாதிபதி சட்டத்தரணி கே.வி.தவராசாவுடன் தொடர்பு கொண்டு கிளிநொச்சி மாவட்ட சிரேஸ்ட பொலிஸ் அத்தியட்சகர் கதைத்துள்ளார்.
அத்துடன் பொலிஸ் நிலையத்திற்கு வந்த வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன் மற்றும் பல்கலைக்கழக விரிவுரையாளர் மாணிக்கவாசகர் இளம்பிறையன் ஆகியோருடனான கலந்துரையாடலையடுத்தும், ஜனாதிபதி சட்டத்தரணி கே.வி.தவராசா மற்றும் கிளிநொச்சி மாவட்ட சிரேஸ்ட பொலிஸ் அத்தியட்சகர் கதைத்துக் கொண்டமைக்கு அமைவாகவும் கடுமையான எந்த நடவடிக்கையும் எடுக்காமல் பொலிஸ் பிணையில் பல்கலைக்கழக மாணவர்கள் விடுதலை செய்யப்பட்டதாக கிளிநொச்சி தகவல்கள் தெரிவிக்கின்றன.



விளம்பர
தொடர்புகளுக்கு
+94 777 163990

தேசியம் பத்திரிகையின் மின்னிதழைப் பெற இவ் வாட்ஸ் ஆப் குழுவில் இணைந்து கொள்ளுங்கள்.
SCAN ME

# இந்தியாவிற்கு திடீர் விஜயம்! ஜெய்சங்கரை சந்தித்த அநுரகுமார!



இந்தியாவுக்கு உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொண்ட தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுர குமார திசாநாயக்க இந்தியாவின் வெளிவிவகார அமைச்சர் ஜெய்சங்கரை சந்தித்துள்ளார்.

இது குறித்து வெளிவிவகார அமைச்சர் ஜெய்சங்கர் தனது உத்தியோகபூர்வ டுவிட்டர் பக்கத்தில் பதிவொன்றை பதிவிட்டுள்ளார்.

இந்த சந்திப்பின் போது மேலும் இலங்கையின் பொருளாதார சவால்கள் மற்றும் முன்னோக்கி செல்லும் பாதை குறித்து கலந்துரையாடியதாக ஜெய்சங்கர் குறிப்பிட்டுள்ளார்.

தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுர குமார திசாநாயக்க உள்ளிட்ட பிரதிநிதிகள் உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொண்டு இந்தியாவுக்கு செல்லவுள்ளனர்.

இந்திய அரசாங்கத்தின் அழைப்பினை ஏற்று நேற்றைய தினம் (05) குறித்த விஜயத்தினை மேற்கொள்ளவுள்ளனர்.

தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுர குமார திசாநாயக்க, அந்த கட்சியின் செயலாளர் வைத்திய நிபுணர் நிஹால் அபேசிங்க, நாடாளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத் உள்ளிட்டோர் இந்த விஜயத்தில் கலந்து கொள்ளவுள்ளனர்.இதனை தேசிய மக்கள் சக்தியின் ஊடகப்பிரிவு அறிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை இந்திய அரசாங்கத்தின் சில பிரதிநிதிகளுக்கும் தேசிய மக்கள் சக்தியின் தலைவர் உள்ளிட்ட பிரதிநிதிகள் குழுவினருக்கும் இடையில் இதன்போது உத்தியோகபூர்வமான சந்திப்புகள் இடம்பெறவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# இந்திய உயர்ஸ்தானிகர்–செந்தில் தொண்டமான் இடையே விசேட கலந்துரையாடல்!

புதிதாக நியமிக்கப்பட்டுள்ள இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் சந்தோஷ் ஜாவுடன் கிழக்கு மாகாண ஆளுநரும் இலங்கை தொழிலாளர் காங்கிரசின் தலைவருமான செந்தில் தொண்டமான் கலந்துரையாடல் ஒன்றை மேற்கொண்டுள்ளார்.

இச்சந்திப்பானது, நேற்று (05.02.2024) இந்திய தூதரகத்தில் இடம்பெற்றுள்ளது.

இதன்போது, கிழக்கு மாகாணம் மற்றும் மலையகத்தின் அபிவிருத்திக்கு தேவையான நிதி குறித்து கலந்துரையாடப்பட்டுள்ளது.

மேலும், இந்திய உயர்ஸ்தானிகரால் இலங்கையின் அபிவிருத்திக்கு தனது முழுமையான உதவிகள் வழங்கப்படும் என இந்திய உயர்ஸ்தானிகரினால் உறுதியளிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.






# யாழ். வட்டுக்கோட்டை பொலிஸாரால் தாக்கப்பட்ட பல்கலைக்கழக மாணவன்!

## மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு!

யாழ்ப்பாணம் - வட்டுக்கோட்டை பொலிஸாரினால் கடுமையான தாக்குதலுக்குள்ளானதாக தெரிவித்து பல்கலைக்கழக மாணவன் ஒருவர் மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு அளித்துள்ளார்.

குறித்த தாக்குதல் சம்பவம் நேற்று (05.2.2024) திங்கட்கிழமை காலை நடைபெற்றதாக பாதிக்கப்பட்டவரால் முறைப்பாடளிக்கப்பட்டுள்ளது.

இன்னுமொரு அலெக்சாக என்னை வட்டுக்கோட்டை பொலிஸார் கொன்றாலும் என்ற பயத்திலேயே அங்கிருந்து ஓடி வந்து மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடளித்தேன் என தெரிவித்த பாதிக்கப்பட்ட மாணவன் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் கல்வி கற்கும் வட்டுக்கோட்டை கோட்டைக்காடு பகுதியினை சேர்ந்த கருணாகரன் நிதர்ஷன் எனும் 27 வயதான இளைஞனே இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடளித்துள்ளார்.

ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவித்த பாதிக்கப்பட்ட மாணவன், எனது கற்றல் நடவடிக்கைகளுக்காக இன்று காலை யாழ் பல்கலைக்கழககத்திற்கு வீட்டிலிருந்து புறப்பட்டேன்.

இந்நிலையில் சித்தன்கேணி எரிபொருள் நிரப்பு நிலையத்திற்கு சென்றுவிட்டு மீள திரும்பி வந்த பொழுது வட்டு இந்து கல்லூரிக்கு அண்மையாக நின்ற பொலிஸார் வழிமறித்துள்ளனர்.

வழிமறித்த பொலிஸார் நாம் மறித்த பொழுது எதற்காக நிற்காது சென்றாய் என கேட்டனர். நீங்கள் போக்குவரத்து பொலிஸார் இல்லை என்ற அடிப்படையில் அவசரமாக சென்றேன் என கூறினேன்.

இந்நிலையில் திடீரென அங்கு வந்த சிவில் உடை தரித்த பொலிஸார் வீதியில் வைத்து சரமாரியாக தாக்கினர். இதனை காணொளியும் எடுத்தேன்.

பின்னர் அவர்கள் தொலைபேசியினையும் பறித்து என்னை பொலிஸ் நிலையத்திற்கு அருகில் உள்ள அறை ஒன்றுக்கு கொண்டு சென்றனர். அறையினுள் பொலிஸார் காலை விரித்து தலைகீழாக தூக்கி அடித்தனர். அடித்து கொண்டு தொலைபேசியில் உள்ள காணொளியை அழிப்பதற்கு தொலைபேசி கடவுச்சொல்லை கேட்டனர்.



நான் மறுத்தேன், மறுத்த பொழுது தொடர்ச்சியாக தாக்குதல் நடாத்தினர். போக்குவரத்து விதிகளை மீறியிருந்தால் எனக்கு தண்டம் விதியுங்கள். இல்லை நீதிமன்றம் அனுப்புங்கள் என கூறியும் அடித்தனர்.எனக்கு சுவாசம் உள்ளெடுக்க பிரச்சினை ஏற்பட்டது. இதனையடுத்து உடனடியாக என்னை வெளியில் கொண்டு வந்து அமர்த்தினர்.

அமர்த்திய பொழுது வீதியில் என்னை அடித்த செய்தி கேட்டு தாயார் வருகை தந்தார். இந்நிலையில் வீதியில் தாக்கியபோது கடையில் இருந்த இருந்த சிசிடிவி காணொளியை அழிப்பதற்காக பொலிஸார் அனைவரும் சென்றுவிட்டனர்.

அடிக்கு பயந்து இருந்த நான் அலெக்ஸ்க்கு நடந்த சம்பவத்தை நினைத்து பயத்தில் ஓடி வந்து விட்டேன். தற்பொழுது மனித உரிமை ஆணைக்குழுவில் முறைப்பாட்டினை பதிவு செய்கின்றேன்.

இன்னுமொரு அலெக்சாக என்னை வட்டுக்கோட்டை பொலிஸார் கொன்றாலும் என்ற பயத்திலேயே ஓடி வந்தேன். எனக்கு ஏதும் நடந்தால் வட்டுக்கோட்டை பொலிசாரே முழுமையான பொறுப்பினையும் ஏற்க வேண்டும் என தெரிவித்தார்.

# கெஹலிய மட்டும் குற்றவாளியல்ல..! ரணில் மற்றும் மகிந்தவை சாடும் சுரேஷ் பிரேமச்சந்திரன்!

தரமற்ற மருந்துக் கொள்வனவிற்கு ஜனாதிபதி ரணில் மற்றும் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவும் ஒரு காரணம் என முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

“தரமற்ற மருந்துக் கொள்வனவு விவகாரத்தில் கைது செய்யப்பட்ட கெஹலிய ரம்புக்வெல்ல மீது நம்பிக்கையில்லா பிரேரணை ஒன்று முன்வைக்கப்பட்டிருந்தது.

அப்போது அவரை, ரணில் மற்றும் மகிந்த அரசாங்கமே காப்பாற்றியிருந்தது. எனவே அவர்களும் இதற்கு ஒரு காரணம்” என குறிப்பிட்டுள்ளார்.



# 27 ஆண்டுகளை பூர்த்தி செய்யும் இலங்கையின் தமிழ் நீதிபதி!




இலங்கையில் வெள்ளி விழா பூர்த்தி செய்த முதல் தமிழ் நீதிபதியான, மாணிக்கவாசகர் இளஞ்செழியன் நீதிபதியாக 27 ஆண்டுகளை பூர்த்தி செய்யவுள்ளார்.

வவுனியாவில், 05.02.1997 அன்று நீதிபதியாக நியமனம் பெற்ற அவர், தனது முதல் நியமனத்தை நீதவானாக ஆரம்பித்து இன்றைய தினத்துடன் (06.02.2024) 27 ஆண்டுகளை பூர்த்தி செய்த முதல் தமிழ் நீதிபதி என்ற சிறப்பிற்குரியவராகிறார்.

தற்போதைய வடக்கு - கிழக்கு மாகாண அனைத்து நீதிபதிகளிலும் 25 ஆண்டுகளை பூர்த்தி செய்த முதல் பெருமைக்குரிய தமிழ் நீதிபதியாக மாணிக்கவாசகர் இளஞ்செழியன் உள்ளார்.

இலங்கையின் சில முக்கிய வழக்குகளான, 1999 இல் யாழ். செம்மணி புதைகுழி வழக்கு, 1999 இல் மன்னாரில் காமாலிக்கா கொலை வழக்கு, மடு தேவாலய குண்டு வெடிப்பு வழக்கு மற்றும் லயன் எயார் குண்டு வெடிப்பு வழக்கு போன்ற வழக்குகளுக்கு இவர் தீர்ப்பு வழங்கியுள்ளார்.

அத்துடன், 2000 - 2008 வரையிலான ஒன்பது ஆண்டுகள் கடுமையான யுத்தம் நிலவிய காலப் பகுதியில் இவர் வவுனியாவில் நீதிபதியாக கடமையாற்றியுள்ளார்.

மேலும், 2009இல் திருகோணமலை கோயில் குரக்கள் மனைவி கொலை வழக்கில் மரண தண்டனை வழங்கியமை, 2015இல் கணவர் கொலை வழக்கில் மனைவிக்கு மரண தண்டனை விதித்தமை, 2018இல் யாழ். இளைஞன் கொலை வழக்கில் இரு இராணுவ அதிகாரிகளுக்கு மரண தண்டனை விதித்தமை போன்றவை இவரால் வழங்கப்பட்ட முக்கிய தீர்ப்புகளாகும்.

# சாந்தனை இலங்கைக்கு அழைத்து வருவதற்கு ஜனாதிபதி இணக்கம்!

ரஜீவ்காந்தி கொலை வழக்கில் கைது செய்யப்பட்டு விடுதலை செய்யப்பட்ட சாந்தனை இலங்கைக்கு அழைத்து வர ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சம்மதம் தெரிவித்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

எனவே அதற்கு தேவையான ஏற்பாடுகளை செய்வதற்கும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இணக்கம் தெரிவித்துள்ளார் என தெரிவிக்கப்படுகிறது.

குறித்த விடயம் தொடர்பாக நேற்று (05) நடைபெற்ற அமைச்சரவை கூட்டத்தில் கலந்துரையாடப்பட்டதாக தெரிவிக்கப்படுகின்றது.




இதன்போது ஜனாதிபதி மற்றும் வெளிவிவகார அமைச்சர் ஆகியோருடன் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா இந்த விடயம் குறித்து பேசியதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன

# புதிய தலைமைத்துவத்திற்கு மாறவேண்டும் : மல்கம் ரஞ்சித்!

இலங்கை புதிய தலைமைத்துவத்திற்கு மாற வேண்டும் என கருத்தினால் மல்கம் ரஞ்சித் அழைப்பு விடுத்துள்ளார்.

அதன்படி சுதந்திரத்தின் பின்னர் சிங்கப்பூரும் இலங்கையும் பின்பற்றிய அணுகுமுறைகளில் உள்ள வித்தியாசங்களை சுட்டிக்காட்டியுள்ள அவர், சிங்கப்பூர் ஐக்கியத்திற்கும் தனது மக்களின் நலனிற்கும் முக்கியத்துவம் கொடுத்தது என்றும், இலங்கையின் தலைமைத்துவம் மதமொழி அடிப்படையில் சமூகங்களை பிரித்ததை கடுமையாக கண்டித்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.



# கொழும்பில் இடம்பெற்ற யுவன்சங்கர் ராஜாவின் ஊடகசந்திப்பு!

யுவன் லோங் டிரைவ்(U1 LONG DRIVE) இசைநிகழ்ச்சியை முன்னிட்டு தென்னிந்திய பாடகரும், இசையமைப்பாளருமான யுவன்சங்கர் ராஜா கலந்துக்கொள்ளும் ஊடகசந்திப்பானது கொழும்பில் இடம்பெற்றுள்ளது.

யுயசயய நுவெநசவயயைஅநவெ வழங்கும் யுவன் சங்கர் ராஜாவின் இசை நிகழ்ச்சி தொடர்பிலேயே இந்த ஊடக சந்திப்பு இடம்பெற்றுள்ளது.
யுவன் லோங் டிரைவ;(U1 LONG DRIVE) இசைநிகழ்ச்சியை முன்னிட்டு தென்னிந்திய பாடகரும், இசையமைப்பாளருமான யுவன்சங்கர் ராஜா கொழும்பை வந்தடைந்துள்ளார்.

எதிர்வரும் 24ஆம் திகதி கொழும்பு சிஆர்ரூஎப்சி மைதானத்தில் இடம்பெறவுள்ள இசை நிகழ்ச்சி தொடர்பான ஊடக சந்திப்பில் கலந்துக்கொள்வதற்காக யுவன்சங்கர் ராஜா இலங்கையை வந்தடைந்துள்ளதாக ஏற்பாட்டுக்குழுவினர் அறிவித்துள்ளனர்.

இந்நிலையில் யுவன் லோங் டிரைவ்வினுடைய முன்னாயத்த கலந்துரையாடல்கள் இன்று மாலை கொழும்பு தாமரைக்கோபுர அரங்கில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.
எதிர்வரும் 24 ஆம் திகதி இடம்பெறவுள்ள யுவன் லோங் டிரைவ் நிகழ்ச்சியானது ரசிகர்கள் மத்தியில்



பெரும் எதிர்பார்ப்பை தோற்றுவித்துள்ளது.

யுயசயய நுவெநசவயயைஅநவெ வழங்கும் யுவன் சங்கர் ராஜாவின் குறித்த மாபெரும் இசை நிகழ்ச்சியில் தென்னிந்திய பாடகர்களான ஹரிச்சரன், என்ரியா, பிரேம்ஜி, திவாகர், சாம்விஷால், குக்சார், சௌந்தர்யா, கௌதம், எம்.சி.சனா ஆகியோரும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

# யாழ்.கொக்குவில் இந்துக்கல்லூரியின் தொழில்நுட்ப பீடம் திறந்து வைப்பு!

யாழ்ப்பாணம் - கொக்குவில் இந்துக் கல்லூரில் நிர்மாணிக்கப்பட்டுள்ள தொழில்நுட்ப பீடம் கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்தவினால் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

குறித்த நிகழ்வானது கல்லூரின் பதில் அதிபர் கே.குமணன் தலைமையில் நேற்று (05.02. 2024) நடைபெற்றுள்ளது. கடந்த 2021ஆம் ஆண்டு அடிக்கல் நாட்டப்பட்ட குறித்த தொழில்நுட்ப ஆய்வுகூடம் மூன்று மாடிகளை கொண்டதாக 76 மில்லியன் செலவில் நிர்மாணிக் கப்பட்டுள்ளது.

இந்த நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன், வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் பற்றிக் டிரஞ்சன், வடக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் ஜோன் குயின்டஸ், அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டிருந்தனர்.









# ஈழத்து தெருக்கள் எங்கும் ஒலித்த இசை வாணியின் இதயக் குரல் !!

**“ (ஏழு ஸ்வரங்களுக்குள் எத்தனையோ பாடல்களை பாடிய இசை வாணியின் இதயக் குரல் ஓய்ந்தாலும், தாயக விடுதலைக்கு குரல் கொடுத்த பாடகி வாணி ஜெயராம் அவர்கள் 04/02/2023 தனது 78வது வயதில் காலமானார். முதலாவது வருட நினைவாக இக்கட்டுரை பிரசுரமாகிறது) ”**



தமிழில் மல்லிகையாய் மணம்வீசி
ஏழு சுவரங்களுக்குள் எத்தனையோ பல பாடல்களை பாடிய பாடகி வாணி ஜெயராம் அவர்கள், பல ஈழ விடுதலைப் பாடல்களைப் பாடியிருக்கிறார் என்பது நம்மில் எத்தனை பேருக்குத் தெரியும் என்பது தெரியவில்லை.

**காலம் கடந்தும் வாழ்வார் !**

தமிழ், தெலுங்கு, கன்னடம் உட்பட 19 மொழிகளில் பாடல்கள் பாடிய மூத்த பின்னணி பாடகி வாணி ஜெயராம் அவர்கள் 04/02/2023 தனது 78வது வயதில் காலமானார். பத்தாயிரம் பாடல்களை பலமொழிகளில் பாடியிருக்கும் அந்தக் குரலிசைக் கலைஞர் காலமானாலும் காலம் கடந்தும் வாழ் வார்.

பாடும் பறவைகள் வாருங்கள்புலி வீரத்திலீபனை பாடுங்கள்.என்று தியாக தீபத்தின் தியாகத்தை உணர்வோடு பாடியஇசைக்குயில் வாணி ஜெய ராம்..உயிர் பிரிந்ததாலும் ஓயாத அந்த இசைக் குயில் எப்போதும் மீண்டும் மீண்டுமாய் எங்கோ ஒரு மூலையில் இசைத்துக் கொண்டே இருக்கும்.

” வீசும் காற்றே தூது செல்லு தமிழ்.
நாட்டில் எழுந்தொரு செய்தி சொல்லு” மேகங்களே இங்கு வாருங்கள்...எனப்பல எழுச்சி பாடல்களை பாடிய தென்னிந்திய பிரபல மூத்த பாடகி வாணி ஜெயராம், இந்திய இராணுவ ஆக்கிரமிப்பு காலப் பகுதியில் இருந்து, எமது தாயக விடுதலைப் பாடல்கள் பலவற்றை உணர்வுபூர்வமாக பாடி, விடுதலைக்கு உணர்வூட்டிய குரல் ஓய்ந்து போனது ஈழ மக்களின் மனதை நெருடிக் கொண்டுள்ளது.

**வீசும் காற்றே தூது செல்லு..**

”ஏழு ஸ்வரங்களுக்குள் எத்தனை பாடல் இதய சுரங்கத்துள் எத்தனை கேள்வி காணும் மனிதருக் குள் எத்தனை சலனம்வெறும் கற்பனை சந்தோ ஷத்தில் அவனது கவனம் ஏழு ஸ்வரங்களுக்குள் எத்தனை பாடல் என கணீ ரென ஒலித்த இவரின் குரலிசைஅமைதியின்றி தவிக்கும் அகங்களுக்கு என்றென்றும்.
அருமருந்தாகியதே என்று கூறலாம்.‘நல்லூர் வீதியில் நடந்தது யாகம்.. நாலு நாள் ஆனதும் சுருண்டது தேகம்..

தியாகத்தின் எல்லையை மீறிய பிள்ளை திலீபனை பாடிட வார்த்தைகள் இல்லை“ என வரலாற்றில் தன் பாடல்கள் மூலம் பங்களிப்பு செய்த வாணி ஜெயராம் அம்மையாரை ஈழ மக்கள் என்றென்றும் நன்றியுடன் நினைவு கூறுவர்.

**தாயக விடுதலைக்கு தோள் கொடுத்தவர்:**

தமிழகத்தில் பலரும் பாடத் தயங்கிய சூழலில் துணிச் சலாகக் ‘களத்தில் கேட்கும் கானங்கள்“ இறுவட் டிற்காக ‘வீசும் காற்றே தூது செல்லு..தமிழ் நாட்டில் எழுந்தொரு சேதி சொல்லு..ஈழத்தில் நாம் படும் வேதனைகள் - அதை
எங்களின் சோதரர் காதில் சொல்லு..
கத்திடக் கேட்டிடும் தூரமல்லோ..கடல்
கை வந்து தாங்கிடும் நீளமல்லோ.,
எத்தனை எத்தனை இங்கு நடந்திட
எங்களின் சோதரர் தூக்கமல்லோ..
இங்கு குயிலினம் பாட மறந்தது..
எங்கள் வயல் வெளி ஆடை இழந்தது..
இங்குள்ள பேய்களும் செய்ய மறந்ததை.. உங்க ளின் ராணுவம் செய்து முடிக்குது எனும் உணர்ச் சிமிக்க பாடலைப் பாடி தாயக விடுதலைக்கு தோள் கொடுத்த வாணி ஜெயராம் அம்மையாரை ஈழ மண் ஒருபோதும் மறவாது.

ஈழப் போரின் உச்சக் கட்ட காரங்களான 2007 ஆம் ஆண்டு தயாரிக்கப்பட்டகவிஞர் காசி ஆனந்தன் அவர்கள் எழுதிய “சென்பகமே சென்பகமே ..சிறகை விரித்து வா.. என்ற பாடலை வாணி ஜெயராம் அவர்கள் அவருடைய இனிமையான குரலில் மிக அற்புதமாக பாடியிருக்கிறார். இசையமைப்பாளர் தேவேந்திரன் தான் இசையமைத்த “ஈட்டி

தொடர்ச்சி 09 பக்கம்

# ஈழத்து தெருக்கள் எங்கும் ஒலித்த இசை வாணியின் இதயக் குரல் !!



முனைகள்” என்ற இசைத் தொகுப்பில் இப்பாடல்கள் வெளியிடப்பட்டன.

**1974இல் ‘தீர்க்க சுமங்கலி’**

1974-ம் வருடம் தமிழ்ப் புத்தாண்டு தினத்தில் வெளியான ‘தீர்க்க சுமங்கலி’ படத்தின் சுவரொட்டியில், படம் வெளிவரும் முன்பே பிரபலமாகியிருந்த ‘மல்லிகை என் மன்னன் மயங்கும் பொன்னான மலரல்லவோ’ என்ற பாடலின் முதல் வரியைக் குறிப்பிட்டு விளம்பரம் செய்திருந்தார்கள். அப்படி விளம்பரம் செய்யத் தூண்டிய குரல், அன்று துளிர் விட்டிருந்த புதிய பாடகியான வாணி ஜெயராமினுடையது. இந்தப் படத்துக்கு முன்பே 1973-ம் வருடம் வெளிவந்த ‘வீட்டுக்கு வந்த மருமகள்’, ‘சொல்லத்தான் நினைக்கிறேன்’ ஆகிய இரு படங்களில் வாணி ஜெயராம் பாடி இருந்தாலும் அவரது குரலை இல்லம் தோறும் கொண்டு சேர்த்த பெருமை ‘தீர்க்க சுமங்கலி’க்குக் கிடைத்தது.

கிட்டத்தட்ட இந்தியாவின் அனைத்து மொழிகளிலும் பாடியிருக்கிறார் வாணி ஜெயராம். எந்த மொழியில் பாடினாலும் அவரது உச்சரிப்பு துல்லியமாக இருக்கும். ”எல்லா மொழிகளிலும் அவற்றினுடைய இலக்கணம் தவறாமல் உச்சரிக்கும் வல்லமை பெற்ற வாணி ஒரு ஆயுட்கால பாடகியே” - என்று கவியரசு கண்ணதாசனால் பாராட்டப்பட்டவர்.

**இசை மருந்து விருந்து :**



பேசும்போதும் மிக மென்மையாக பேசக்கூடிய அவர் தமிழ் திரைப்படங்களில் அவர் பாடிய பலப் பாடல்கள் பலருக்கும் மிகவும் பிடித்தமானவை. இசை என்பது ஒரு வித மருந்து. அதை தம் குரல்களால் விருந்தாக படைக்கும் இசை வைத்தியர்கள் வரிசையில் பாடகி வாணி ஜெயராம் முன்னிலையில் என்றும் நிற்கிறார் என்பதே உண்மை.

பிரபல தென்னிந்திய திரையிசைப் பாடகி, வாணி ஜெயராம் தனது 78வது வயதில் காலமாகியது பலரையும் கண்ணீரில் மூழ்க வைத்துள்ளது.

தியாக தீபம் திலீபன் அவர்களின் நினைவு சுமந்த ”பாடும் பறவைகள் வாருங்கள் என்ற பாடலுடன், களத்தில் கேட்கும் கானங்கள் ஒலி நாடாவில் வீசும் காற்றே தூது செல்லு, தென்னங் கீற்றில் தென்றல் வந்து மோதும், என்னும் பாடல்கள், பாசறைப் பாடல்கள் ஒலி நாடாவில் பரணி பாடுவோம் புதியதானதோர் பரணி பாடுவோம், மேகங்கள் இங்கு வாருங்கள், வீரன் மண்ணில் புதையும் போது, போன்ற விடுதலைப் பாடல்களுடன், தலை வாரி பூச் சூடினேன், செந்தமிழ் வீரனடா சீறிடும் வேங்கையடா எங்கள் போன்ற இன்னும் பல எழுச்சிப் பாடல்களைப் பாடி தாயக விடுதலைக்கு உயிர்க்குரல் கொடுத்தவர் வாணி ஜெயராம்

அவர்களை ஈழத்துக் கலைஞர்கள் கண்ணீர் வணக்கத்தை தெரிவித்துக் கொள்வதுடன் ஒருபோதும் மறவர்.

இசை வாணியின் இதயக்குரலால் எத்தனையோ மொழிகள், எத்தனையோ ஆயிரம் பாடல்கள் பிரசித்தி பெற்றன.

இசை வாணியின் மாயக் குரலில் மயங்கிக் கிடந்த காலங்கள் பல. வானலைகளில் தேனென ஒலித்த அந்த குரல் ஓய்ந்து போனாலும், ஈழத்து தெருக்கள் எங்கும் இசை வாணியின் இதயக் குரல் என்றும் ஒலித்த வண்ணமே உள்ளது.



ஐங்கரன் விக்கினேஸ்வரா

# தமிழினத்தின் இனவழிப்பு!

## பிரித்தானிய மன்னரிடம் கையளிக்கப்பட்ட கடிதம்!

தன்னாட்சிக்கான எழுச்சிப் போராட்டத்தின் கொள்கைப் பிரகடனம் பிரித்தானிய பிரதமருக்கும், வெளிவிவகார அமைச்சுக்கும் இன்று வழங்கி வைக்கப்பட்டுள்ளது.

அத்துடன், வட்டுக்கோட்டைத் தீர்மானத்தின் அடிப்படையில் தமிழீழ மக்களுக்கான அரசியற் தீர்வு அமைய வேண்டும் என்பதை வலியுறுத்திய கடிதமும் இதன் போது வழங்கப்பட்டுள்ளது.

இலங்கையில் கொண்டாடப்படும் சுதந்திர நாள், தமிழ் மக்களின் கரிநாள் என பிரகடனப்படுத்தப்பட்டு முன்னெடுக்கப்பட்ட ஆர்ப்பாட்ட பேரணியின் இறுதியில் கொள்கைப் பிரகடனம் மற்றும் கடிதத்தை கையளிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அனைத்துலக இளையோர் அமைப்பு, அனைத்துலக இராஜதந்திரக் கட்டமைப்பு மற்றும் அனைத்துலக ஈழத்தமிழர் அவை சார்பாக பிரித்தானிய தமிழர் ஒருங்கிணைப்புக்குழு இந்த பிரகடனத்தையும் கடிதத்தையும் வழங்கியுள்ளது.

பிரித்தானிய அரசாட்சியில் எடுக்கப்பட்ட தவறான அரசியல் முடிவே தமிழினம் இன்று வரை சந்தித்து வரும் சிங்கள தேசத்தின் இனவழிப்பிற்கு காரணமாக அமைந்துள்ளது.

இதனை வரலாற்று ரீதியாக எடுத்துக்காட்டி, பிரித்தானிய மன்னர் மாளிகை நோக்கி ஆயிரக்கணக்கான தமிழர் படை வட்டுக்கோட்டைத் தீர்மானத்தின் அடிப்படையில் தன்னாட்சிக்கான உரிமைக்குரல் என்ற கோசத்துடனான பேரெழுச்சியுடன் கரிநாள் போராட்டத்தை முன்னெடுத்தது.

இந்த போராட்டத்தில் ஐந்தாயிரத்துக்கும் அதிகமான மக்கள் ஒன்று கூடியிருந்தனர்.

பிரித்தானியாவில் உள்ள சிறிலங்கா தூதரகத்தின் முன் வானுயர ஒலித்திக் கொண்டிருந்த கொட்டொலிகள் மத்தியில் ஆரம்பிக்கப்பட்ட மாபெரும் போராட்டம், பிரித்தானியப் பேரரசின் மன்னர் மாளிகை நோக்கி பேரணியாக சென்றடைந்தது.

இதன் போது, கட்டுப்படுத்த முடியாத மக்கள் வெள்ளத்துடன் பிரித்தானியக் காவல்துறை போராடியது.

தமிழர் தாயகத்தில் கரிநாளான நேற்றைய தினம், எழுச்சி கொண்ட மக்கள் போராட்டங்களை சிறிலங்கா அரசு நசுக்க முற்பட்ட வேளையிலும், தடைகளை உடைத்து போராட்டங்கள் நடைபெற்றுள்ள சூழலில், பிரித்தானிய மன்னரை நோக்கிய இந்த போராட்டம் முக்கியம் வாய்ந்ததாக பார்க்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.






# இதய அஞ்சலி

பிறப்பு
28
09
1940



இறப்பு
05
02
2024

அமரர்

## அமிர்தநாதன் செபமாலை

ரெலோ இயக்கத்தின் தலைவர், வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதனின் தாயார்

திருமதி செபமாலை அமிர்தநாதன் அவர்கள் இறைவனடி சேர்ந்துள்ளார் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுவதுடன் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களையும் இரங்கலையும் தெரிவிக்கின்றோம்.

சபா குகதாஸ்
முன்னாள் வடக்கு மாகாண சபை உறுப்பினர்
யாழ் மாவட்ட அமைப்பாளர்
தமிழீழ விடுதலை இயக்கம் (ரெலோ)

# காணி விற்பனைக்கு

## புத்தூர் மட்டுவில்

### பிரதான வீதியில்.

**2 பரப்பாக பிரிக்கப்பட்டுள்ளது.**

**2 பரப்பு - 5,50,000/=**

**20 அடி பாதையுடன்.**

- யாழ் மத்திய பொருளாதார சந்தைக்கு அருகாமையில் காணி அமைந்துள்ளது.
- ஆலையங்கள் மற்றும் வைத்தியசாலை, பாடசாலைகளும் அருகாமையில் உள்ளது.

- நன்னீர் நிலம்,
- மேட்டு நிலம்,
- மின்சார வசதியும் உண்டு.

மேலதிக விபரங்களுக்கு :

**076 10 98 504, 074 26 00 617**

தேசியம் பத்திரிகையின் மின்னிதழைப் பெற இவ் வாட்ஸ் ஆஃப் குழுவில் இணைந்து கொள்ளுங்கள்.

Whatsapp +94 76 567 3339

No. 27, Kannathiddy Road, Jaffna.Tel : 021 222 7557

SCAN ME

அரச அங்கீகாரம் பெற்ற வடமாகாணத்தின் முதல்தர கனரக வாகனப் பயிற்சிப் பாடசாலை.




# கிருபா லேணர்ஸ்

## කිරුබා ලර්නර්ස් KIRUBAA LEARNERS

- குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் விரைவான சாரதி அனுமதிப்பத்திரம்.
- எழுத்துப்பரீட்சைக்கு விசேட வீதி ஒழுங்கு வகுப்புக்கள்
- அசோக் லேடன் பஸ் மூலமான கனரக வாகனப் பயிற்சி
- மும்மொழிகளிலும். உங்களுக்கு விரும்பிய நேரங்களிலும் வாகன பயிற்சிகள்.
- சகல கிளைகளிலும் பயிற்சி வகுப்புக்கள்.
- தவணைமுறையில் கட்டணங்கள்.
- இரவிலும் வாகனப் பயிற்சிகள்.




**தலைமையகம்**
226, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்
021 222 4353
0777 22 5292

| | | | |
|---|---|---|---|
| சுன்னாகம் 021 224 2022 | நெல்லியடி 021 226 0700 | பருத்தித்துறை 021 226 1100 | பூநகரி 021 320 1818 |
| ஆவரங்கால் 021 222 6688 | சித்தங்கேணி 021 225 2500 | சாவகச்சேரி 021 227 0700 | மன்னார் 023 225 1656 |
| முழங்காவில் 021 300 6544 | கிளிநொச்சி 021 228 5505 | விஸ்வமடு 021 320 1515 | வவுனியா 024 222 7777 |

# SMART TECH SOLUTION





உங்கள் வீடு, அலுவலகம் மற்றும் கம்பனிகளுக்கு CCTV கண்காணிப்பு கமரா சிறந்த முறையில் அமைத்துத்தரப்படும். சிறந்த வாடிக்கையாளர் சேவை அனுபவம் வாய்ந்த தொழில்நுட்பவியலாளர்கள் CCTV installation துறையில் 15 வருட அனுபவம் வாய்ந்த நிறுவனம்.

## Our Services:

CCTV sales & Installation / Alarm system
Door Lock /Finger Print Attendance /Electric Fence / Local Networking / Computer Repair & Maintenance / Software Development



CCTV பொருத்துனர்களுக்கும் விற்பனையாளர்களுக்கும் விசேட விலைக்கழிவு வழங்கப்படும்.

Contact us for More Information
+94 77 684 3023

+94 71684 3023 / +94 21221 3023
No: 282, Hospital Road, Jaffna.
www.smarttechsolution.lk

**தேசியம்** பத்திரிகையின் மின்னிதழைப் பெற இவ் வாட்ஸ் ஆஃப் குழுவில் இணைந்து கொள்ளுங்கள்.

Whatsapp +94 76 567 3339

No. 27, Kannathiddy Road, Jaffna.Tel : 021 222 7557

SCAN ME